Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Valluvar's Admiration of Nature

**Dr. V. Sasi Rekha,** Assistant Professor of Tamil,
Pioneer Kumaraswamy College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3820-9032**
**DOI: 10.5281/zenodo.6619507**

## Abstract

*Thiruvalluvar lived a life of harmony with nature. That is why he mentions nature and its true meaning in many places in his scriptures. The tree, vine, flower, fruit, seed, sky, the wind, fire, and etc., which may be in nature, has been used as example in many places in "Thirukkural". Many matters are allegorical and the trees are considered as supreme beings that have moral ethics. The purpose of this article is to explore the examples of plants.*

**Keywords:** Thiruvalluvar, Harmony, Nature, Naattam, "Thirukkurral".

## References

[1] Somasundaranar. *Kurunthokai Urai*, Kalaga Veliudu.
[2] M. Sivasubramanian. *Thirukkural*. Commercial Publishing, Sivakasi.
[3] Elamporanar. *Tolkappiyam* Urai. (porulathikaram), Shardha Publishing.
[4] *Bharathiyar Kavithaigal*, Thirumagal Nilayam.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# வள்ளுவரின் இயற்கை நாட்டம்

**முனைவர் வே. சசிரேகா,** உதவிப்பேராசிரியர்,
பயோனியர் குமாரசுவாமிக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-3820-9032
**DOI: 10.5281/zenodo.6619507**

**ஆய்வுச் சுருக்கம்**

*தெய்வப்புலவர் படைத்த திருக்குறளில் இயற்கையையும் அதன் உண்மைப் பொருளையும் பல இடங்களில் குறிப்பிடுகிறார். தாம் கூற வந்த கருத்துகளுக்கு வலிமை சேர்க்க பல உவமைகளைத் திருக்குறளில் கையாண்டுள்ளார். இந்த உவமைகளில் பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி, பூ, காய், கனி, ஐம்பூதங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் மரங்களை உவமையாகக் கொண்டுள்ள திருக்குறள்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** திருவள்ளுவர், இயற்கை, நாட்டம், திருக்குறள்.

**முன்னுரை**

தெய்வப்புலவர் திருவள்ளுவர், இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர். அதனால் தான் அவர் படைத்த திருக்குறளில், இயற்கையையும், அதன் உண்மைப் பொருளையும் பலஇடங்களில் குறிப்பிடுகிறார். தாம் கூற வந்த கருத்துக்களுக்கு வலிமை சேர்க்க பல உவமைகளைத்திருக்குறளில் கையாண்டுள்ளார். இந்த உவமைகளில், பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி, பூ, காய், கனி, ஐம்பூதங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் மரங்களை உவமையாகக் கொண்டுள்ள திருக்குறள்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வள்ளுவர் குறிப்பிடும் மரங்கள்**

தமிழர்களின் வாழ்வில் மரம் மிகமுக்கியமான பங்கு வகிக்கிறது. அரசமரம், ஆலமரம், வேப்பமரம், வில்வமரம் போன்றவை மக்களால் இன்றும் வணங்கப்படும் மரங்களாக இருந்து வருகின்றன. சங்ககாலத்திலிருந்தே மரங்களில் தெய்வம் உறைந்திருக்கும். அவை கொடியோரிடம் நம்மை காக்கும் என்ற நம்பிக்கை இருந்து வந்துள்ளது. இதனை,

**"மன்றமரா அத்தபே எமுதிர்கடவுள்**
**கொடியோர்த் தெறூஉம் என்ப" (குறுந்- 87)**

என்ற குறுந்தொகைப் பாடலால் அறியலாம். அன்றாட வாழ்வில் கண்ணுற்றுக் கொண்டிருக்கும் மரங்கள் குறித்து வள்ளுவர் பல வகையாகக் குறிப்பிடுகிறார். பயன்மரம், நச்சுமரம், மருந்துமரம், வற்றல்மரம், முள்மரம் என மரங்களை வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

**பயன் மரம்**

அனைத்து மரங்களும் பயன்தரக்கூடியவை தான். இருப்பினும் வள்ளுவர் பயன்மரம் என்று குறிப்பிடுவது கனிகள் நிறைந்திருக்கும் மரத்தினை. பழுமரம் எங்கே இருந்தாலும் பறவைகள் அதனை நாடிச்செல்லும். இதனை வள்ளுவர் 'ஒப்புரவறிதல்' என்ற அதிகாரத்தில் உவமையாகக் கையாண்டுள்ளார்.

**"பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்" (குறள்- 216)**

என்ற குறட்பாவில், பிறருக்கு உதவி செய்பவரிடத்தில் செல்வம் சேர்வது, ஊரின் நடுவே பயன்மிக்க மரத்தில் பழம் பழுத்தது போன்றதாகும் என்று கூறுகிறார். பயன்மிக்க மரத்தில் பழுத்தபழமானது பறவைகளுக்கு மட்டுமன்றி பலருக்கும் பயன்படுவதைப்போல, பிறருக்கு உதவவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டவர்களிடம் சேரும் செல்வமானது பலருக்கும் பயன்படும். இதில் நல்லெண்ணம் கொண்ட செல்வந்தருக்கு பயன்மரம் உவமையாகக் கூறப்படுள்ளது.

**நச்சு மரம்**

பயன்மரத்திற்கு எதிர்மறையாக நச்சுமரத்தினை வள்ளுவர் குறிப்பிடுகிறார். பிறரால் விரும்பப்படாதவனுடைய செல்வமானது, ஊரின் நடுவே நச்சுமரம் பழுத்தது போன்றதாகும். அதாவது நச்சுத்தன்மை வாய்ந்த பழங்களைத் தருகின்ற மரமானது பார்ப்பதற்கு மிகவும் அழகுடையதாகக் காட்சியளிக்கும். ஆனால் அதிலுள்ள விஷக்கனிகள் யாருக்கும் பயன்படாமல் வீணாகும். அதுபோன்று பிறருக்குக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாதவரிடம் சேரும்செல்வமானது பயனற்றது. இதனை,

**"நச்சுப் படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சுமரம் பழுத் தற்று" (குறள்- 1008)**

என்ற குறட்பாவால் அறியலாம்.

**வற்றல் மரம்**

பட்டுப்போன காய்ந்த மரத்தையே வற்றல் மரம் என்கிறார் வள்ளுவர். அன்புடைமை என்னும் அதிகாரத்தில், அன்பின் இன்றியமையாமையைப் பற்றி கூறும்போது, மனதில் அன்பு இல்லாதவனுடைய குடும்பவாழ்க்கையானது மகிழ்ச்சி உடையதாக இருக்காது என்பதை விளக்க வற்றல் மரத்தை உவமையாகக் கூறுகிறார். வறண்ட பாலைநிலத்தில், பட்டுப் போன மரம் தளிர்த்தல் என்பது இயலாத செயலோ, அதேபோன்று தான் மனதில் அன்புஇல்லாதவருடைய வாழ்வும் மகிழ்ச்சியற்றது என்கிறார் வள்ளுவர் இதனை,

**"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று" (குறள் – 879)**

என்ற குறட்பாவால் அறியலாம்.

**முள் மரம்**

'பகைத்திறம் தெரிதல்' என்ற அதிகாரத்தில் பகை என்கின்ற பண்பற்ற தீமை பற்றி கூறும் வள்ளுவர், பகைவரை முள்மரம் என்று குறிப்பிடுகிறார். முள்மரத்தை சிறியதாக இருக்கும்போதே வெட்டிவிட வேண்டும். இல்லையெனில் அது வளர்ந்து வைரம் அடைந்தால் வெட்டுவோரின் கையைக் கிழித்துவிடும் என்பதை,

**"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து" (குறள்- 879)**

என்ற குறளில் விளக்குகிறார். முள்மரத்தை சிறியதாக இருக்கும்போது வெட்டுவதைப் போல பகைவர்களை அவர்கள் உருவாகின உடனே அழித்துவிட வேண்டும். இல்லையெனில் முள்மரம் வளர்ந்து பெரிதாகி வெட்டுபவரின் கையைக் கிழிப்பது போன்று நம்மை அழித்துவிடும்.

**மருந்து மரம்**

மருத்துவ குணமுடைய மரங்களை மருந்துமரம் என்பர். சில மரங்களின் இலை, காய், விதை போன்ற சில பகுதிகள் மருந்தாக பயன்படும். சில மரங்களின் வேர், பட்டை, இலை, பூ, காய், கனி, விதை என அனைத்துப் பகுதிகளும் மருந்தாகப் பயன்படும். இத்தகைய மருந்து மரத்தை, பெருந்தன்மையுடைய செல்வந்தனிடம் சேரும் செல்வத்திற்கு உவமையாகக் கூறுகிறார். இதனை,

**"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகைய என்கண் படின்" (குறள்- 217)**

என்ற குறட்பாவால் அறியலாம். அதாவது, உதவிசெய்யும் பெருந்தன்மையுடையவனிடத்தில் சேரும் செல்வமானது, எல்லா பகுதிகளும் மருந்தாகி பயன்படும் மரத்தைப் போன்று பயனுடையதாக விளங்கும்.

**பனை மரம்**

தமிழரின் 'கற்பகத்தரு' என்று சிறப்பிக்கப்படும் பனைமரம் குறித்து வள்ளுவர் மூன்று குறள்களில் குறிப்பிட்டுள்ளார். செய்நன்றியறிதல் என்னும் அதிகாரத்தில், தினையளவு ஒருவன் உதவி செய்திருந்தலும், நன்றியுடையவர் அதனை பனையளவாக மதித்துப் போற்றுவர் என்பதை,

**"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பயன் தெரிவார்" (குறள்-104)**

என்று கூறுகிறார். மேலும், 'குற்றங்கடிதல்' என்னும் அதிகாரத்தில், பழிக்கு அஞ்சுபவர்கள், தினையளவு சிறிய குற்றம் செய்தாலும், அதனை பனையளவு பெரிதாகக் கருதுவர் என்று கூறுகிறார். மேலும், காமத்துப்பாலில், 'புணர்ச்சிவிதும்பல்' என்னும் அதிகாரத்தில் காதலின் அளவை குறிப்பிடுவதற்கு பனையைப் பயன்படுத்துகிறார். காதல்பனை அளவுக்கு அதிகமாக தோன்றும் போது, தினையளவு கூட ஊடல் கொள்ளாமல் இருப்பது நல்லது என்பதனை,

**"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்**
**காமம் நிறைய வரின்" (குறள்– 1282)**

என்ற குறட்பாவில் விளக்குகிறார். பனை என்பதை அளவுப்பெயராக தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தற்போதும் பேச்சுவழக்கில், ஆழத்தையும், உயரத்தையும்குறிக்க, ஒருபனையளவு, அரை பனையளவு என்று சொல்வதுண்டு.

**மரம்போல்வர்**

தொல்காப்பியன் ஓரறிவுடைய உயிர் முதல் ஆறறிவுடைய உயிர்வரை பட்டியலிட்டுக் கூறும்போது, ஓரறிவுடைய உயிர்களாக புல், மரம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார். இதனை,

**"புல்லும் மரனும் ஓரறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (தொல். பொருள். 572)**

என்ற நூற்பாவில் அறியலாம்.

வள்ளுவர் தம் குறட்பாக்களுள் மூன்று குறள்களில், மனிதப் பண்பாகிய, அன்பு, ஊக்கம் போன்ற குணங்கள் இல்லாதவர்கள் ஓரறிவு உடைய மரத்திற்கு ஒப்பாவர் என்று கூறுகிறார். அரம்போன்று கூர்மையான அறிவுடையவராக இருந்தாலும் மக்கட்பண்பு இல்லாதவரை, மரம் என்று குறிப்பிடுகிறார். ஊக்கம் தான் ஒரு மனிதனுக்கு வலிமையைத் தரும். அவ்வூக்கம் இல்லாதவர்கள் உருவத்தில் பார்ப்பதற்கு மனிதர்களாகக் காணப்பட்டாலும், மனத்தால் அவர்கள் ஓரறிவு உடைய மரங்களே என்பதனை,

**"உரமொருவற்குள்ளவெறுக்கையஃதில்லார்**
**மரமக்களாதலேவேறு" (குறள்– 600)**

என்ற குறளின் மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் ஒருவருக்குக் கண் இருந்தும், அந்தகண்ணுக்குரிய இரக்கமும், அன்பும் இல்லாவிட்டால், அவர் இயங்கினாலும், மண்ணோடு சேர்ந்து நின்று இயங்காமல் நிற்கும் மரத்திற்கு ஒப்பாவர் என்கிறார். இதனை,

**"மண்ணோடி யைந்தமரத் தனையர் கண்ணோடு**
**இயைந்து கண்ணோடா தவர்" (குறள்- 576)**

என்ற குறட்பாவில் அறிந்து கொள்ளலாம். இதனையே பாரதியாரும் தன் பாஞ்சாலிச பதத்தில்,
"நெட்டை மரங்களென நின்று புலம்பினார்" – பாஞ்சாலி சபதம் என்று பாஞ்சாலியை துச்சாதனன் கூந்தலைப் பற்றி அரசவைக்கு இழுத்து வரும்போது அதனைத் தடுக்காதவர்களைப் பார்த்து கூறுகிறார்.

**முடிவுரை**

வள்ளுவப் பெருந்தகையின் அனுபவப் பிழிவிலிருந்து பலவகையான மரங்கள் மட்டுமின்றி, மலர், தளிர், காய், கனி என்று தாவரங்களைப் பற்றி பல குறிப்புக்களைத் தந்திருக்கிறார். இது அவருடைய இயற்கை நாட்டத்தினையும், சமுதாய உற்று நோக்குத்திறனையும் நமக்கு புலப்படுத்துவனவாக உள்ளன.

**துணைநின்றநூல்கள்**

[1] சோமசுந்தரனார். *குறுந்தொகை* உரை, கழக வெளியீடு.
[2] எம். சிவசுப்ரமணியன். *திருக்குறள்.* கமர்சியல் பதிப்பகம், சிவகாசி.
[3] இளம்பூரணர். தொல்காப்பியம் உரை. (பொருளதிகாரம்), சாரதா பதிப்பகம்.
[4] *பாரதியார் கவிதைகள்*, திருமகள் நிலையம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.